# திருவாரூர் மாவட்டம்

# கூத்தாநல்லூர் நகராட்சி

# 2018-2019 ஆம் ஆண்டு

# நிர்வாக அறிக்கை

# கூத்தாநல்லூர் நகராட்சி

## 2018-19ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை

**1. அ) அமைப்பும் ஆட்சியும்:**

கூத்தாநல்லூர் நகராட்சி எல்லைக்குள் 1) கூத்தாநல்லூர் 2) லெட்சுமாங்குடி, 3) பண்டுதகுடி, 4) இராமநாதன் கோவில் ஆகிய நான்கு வருவாய் கிராமங்கள் அமைந்துள்ளன. நகரின் நான்கு எல்லை கிராமங்களாக வடக்கே ஆய்குடியும், தெற்கே பழையனுார் தொத்தங்குடியும், மேற்கே சித்தாம்பூரும், கிழக்கே அகர வேளுக்குடி மற்றும் வக்கராநல்லூரும் அமையப்பெற்றுள்ளது. நகரின் மொத்த பரப்பளவு 12.31 சதுர கிலோ மீட்டர்களாகும். இந்நகராட்சி 168 திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்டும், 30 நாகப்பட்டிணம் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்டும் அமைந்துள்ளது. 01.01.1997 முதல் இந்நகர் திருவாரூர் மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக அமைப்பின் கீழ் தஞ்சை மண்டல நகராட்சிகள் நிாவாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. இந்நகராட்சி தேர்வு நிலை பேரூராட்சி நிலையிலிருந்து நகராட்சியாக அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அரசாணை எண் 97 நாள் 24.3.1994 ன்படி 1.4.1994ம் தேதி முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்படடது. அரசின் 22.05.1998-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அரசாணை எண் 85-ன் படி 1.4.98 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, அது முதல் தொடர்ந்து இரண்டாம் நிலை நகராட்சியாக தற்போது செயல்பட்டு வருகிறது.

**ஆ. மக்கள் தொகை :**

1991 – ம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 21,870 ஆகும். இதில் ஆண்கள் 10,421 மற்றும் பெண்கள் 11,459 ஆகும். 2001 ம் ஆண்டின் இந்திய மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி நகரின் மொத்த மக்கட்தொகை 22,995 ஆகும். இதில் ஆண்கள் 10,846 மற்றும் பெண்கள் 12,149 பேர் மற்றும் இதரர் 1 ஆகும்.

2011 ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு உத்தேச மக்கள் தொகை 25481 ஆண்கள் 12218 பெண்கள் 13262 மற்றவர் 1 ஆகும்.

**இ) மன்ற அமைப்பும் தோற்றமும்**
**உள்ளாட்சி தேர்தல் அக்டோபர் 2011க்கு முன் நகர்மன்ற தலைவர்/துணைத் தலைவர்/உறுப்பினர்கள்**

| வார்டு எண் | உறுப்பினர் பெயர் |
|---|---|
| 21 | யாஸ்மின் பர்வீன் .கே.எச்<br>நகர் மன்ற தலைவர் |
| 13 | காதர் உசேன் .எல்.எம்.<br>நகர் மன்ற துணை தலைவர் |
| 1 | மாரியப்பன் . டி<br>நகர் மன்ற உறுப்பினர் |
| 2 | டோமினிக்.டி நகர்மன்ற உறுப்பினர் 5.10.2007ல் இறந்துவிட்டார்<br>சதீஷ்.எஸ் 22.2.08 ல வெற்றி பெற்று முதல் பதவி ஏற்றுள்ளார் |
| 3 | குமரேசன்.ஜெ<br>நகர் மன்ற உறுப்பினர் |
| 4 | மாரிமுத்து.கு<br>நகர் மன்ற உறுப்பினர் |
| 5 | ஜெயராஜ்.கே<br>நகர் மன்ற உறுப்பினர் |
| 6 | வனஜா. பீ<br>நகர் மன்ற உறுப்பினர் |
| 7 | ஹாஜா ஜமாலுதீன் .கே.ஏ<br>நகர் மன்ற உறுப்பினர் |
| 8 | சச்சு. ஆ<br>நகர் மன்ற உறுப்பினர் |
| 9 | ரவி .எஸ்<br>நகர் மன்ற உறுப்பினர் |
| 10 | பரிதாபேகம் .எம்.ஏ<br>நகர் மன்ற உறுப்பினர் |
| 11 | காயாரோகணம் .பி<br>நகர் மன்ற உறுப்பினர் |
| 12 | கனகா .கே<br>நகர் மன்ற உறுப்பினர் |
| 14 | பாஸ்கரன் .கே<br>நகர் மன்ற உறுப்பினர் |
| 15 | ஹலிமா பேகம் .எச்<br>நகர் மன்ற உறுப்பினர் |
| 16 | முகம்மதுரபியுதீன் .பி.எம்.ஏ<br>நகர் மன்ற உறுப்பினர் |
| 17 | ஹாஜா நஜ்முதீன். எஸ்.எஸ்<br>நகர் மன்ற உறுப்பினர் |
| 18 | அகமது சாதிக் .எஸ்.எம்.ஜே<br>நகர் மன்ற உறுப்பினர் |
| 19 | அப்துல் மாலிக் .ஏ.கே<br>நகர் மன்ற உறுப்பினர் |
| 20 | பாத்திமா .எல்.எம்.ஜே<br>நகர் மன்ற உறுப்பினர் |
| 22 | கஸ்தூரி .சி<br>நகர் மன்ற உறுப்பினர் |
| 23 | அப்துல் ஹமீது .என்.ஏ.எம்<br>நகர் மன்ற உறுப்பினர் |

உள்ளாட்சி தேர்தல் அக்டோபர் 2011க்கு பின நகர்மன்ற தலைவர்/துணைத் தலைவர்/உறுப்பினர்கள்

| நகர்மன்ற தலைவர்/துணைத் தலைவர்/ வார்டு எண் | நகர்மன்ற தலைவர்/துணைத் தலைவர்/ உறுப்பினர் பெயர் |
|---|---|
| நகர் மன்ற தலைவர் | ஜெயராஜ். கே<br>நகர்மன்ற தலைவர் |
| துணைத் தலைவர் | முகமது அஷ்ரப்.எல்.எம் நகாமன்ற துணைத் தலைவர் மற்றும் 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 1 | சிவதாஸ். எம்<br>1- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 2 | முகமது ரபீக். கே<br>2- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 3 | சேகர் .எஸ்<br>3- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 4 | சொற்கோ. எ<br>4- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 5 | வல்லரசன் .எம்<br>5- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 6 | சத்யா .எஸ்<br>6- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 7 | ஹாஜா கமாலுதீன் .என்.எம்.னஎ.<br>7- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 8 | ஐஸ்வர்யா .வி<br>8- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 9 | ஜெயராமன் .கே<br>9- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 10 | நாச்சியா .கே<br>10- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 11 | ராஜசேகரன் .ஆர்<br>11- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 12 | ஜி.சாந்தி<br>12- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 13 | காதர் உசேன். எஸ்.எம்<br>13- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 14 | நாகராஜன் .கே<br>14- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 15 | மெஹர்னிஸா .எம்.ஜெ.எஸ்<br>15- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 16 | முகமது அஷ்ரப் .எல்.எம் நகர்மன்ற துணைத் தலைவர்<br>16- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 17 | ஹாஜா நஜ்முதீன் .எஸ்.எஸ்<br>17- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 18 | அகமது சாதிக் எஸ்.எம்<br>18- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 19 | ரபியுதீன் ஜே.ஹெச்.<br>19- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 20 | பாத்திமா சித்திக் எல்.எம்.ஜே<br>20- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 21 | பாத்திமா ரிபாய்தா எஸ்.எம்.<br>21- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 22 | ஸ்ரீ தேவி ஜி<br>22- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 23 | அப்துல் ஹமிது என்.எம்.ஏ<br>23- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 24 | மீராமைதீன் .பி<br>24- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |

**ஈ) நிர்வாக அமைப்பு:**

1) இந்நகராட்சியின் ஆணையராக அறிக்கையாண்டில் கூத்தாநல்லூர் நகராட்சியில் ஆணையர் திரு. சோ.புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை அவர்கள் 1.4.2018 முதல் 09.03.2019 வரை பணிபுரிந்து வந்துள்ளார். அறிக்கையாண்டில் நகராட்சி பொறியாளராக 1.4.2018 முதல் 11.03.2019 வரை திரு நா. சந்திரசேகரன் அவர்கள் பணியாற்றி வந்துள்ளார். 11.03.2019முத்ல 31.03.2019 வரை திரு.த.ராஜகோபாலன் நகராட்சி பொறியாளர் (ம) ஆணையர் (மு.கூ.பொ) பணிபுரிந்து வருகிறார்.

2) அறிக்கையாண்டில் 1.4.2018 முதல் 31.03.2019 வரை திருமதி.ஆர்.லதா அவர்கள் மேலளராக பணியாற்றி வந்துள்ளார்.

3) 1.4.2018 முதல் 31.03.2019 வரை திரு.டி.ஹிரகிருஷ்ணன் உதவியாளர் (கணக்கராக) பணிபுரிந்து வந்துள்ளார்.

4) நகராட்சியின் பொதுப்பிரிவு பணிகளை மேற்கொள்ள ஒரு மேலாளர், கணக்கர், ஐந்து இளநிலை உதவியாளர்களும், ஒரு பதிவறை எழுத்தர், ஒரு அலுவலக உதவியாளரும் மற்றும் தட்டச்சரும் பணியாற்றினார்கள். மேலும் 1999ம் ஆண்டு முதல் தோற்றுவிக்கப்பட்ட கணினி உதவி திட்ட அமைப்பாளர் பணியிடம் 2016-2017ல் காலியாக உள்ளது. நகராட்சியின் வரிவசூல் பணிகளை மேற்கொள்ள மூன்று வருவாய் உதவியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். நகரமைப்பு பணிகளை கவனித்திட ஒரு கட்டிட ஆய்வர் பணியாற்றி வருகின்றார். அறிக்கையாண்டில் <u>பொதுப்பிரிவு</u> பணியாளர்களுக்கான ஊதியம், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, பிரயாணப்படி, பண்டிகை முன் பணம் மற்றும் ஒய்வூதியம், குடும்ப ஒய்வூதியம் ஆகிய பட்டுவாடாக்களின்படி செலவு தொகை ரூ. 34.94 இலட்சம் ஆகும். வசூல் பிரிவு பணியாளர் செலவினமாக ரூ. 8.76 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவின் பணியாளர்களுக்கான செலவு ரூ 16.34 இலட்சம் ஆகும். பொறியியல் பிரிவில் தெருவிளக்கு பராமரிப்பில் மின்கம்பியாளர் பணியிடம் 23.5.2008 முதல் 31.3.2019 வரை காலியாக உள்ளது. மின்கம்பி உதவியாளர் ஒன்றும் பம்பு ரும் அட்டெண்டர் பணியிடம் ஒன்றும் 22.9.2008 முதல் 31.3.2019 வரை காலியாக உள்ளது.

**2) மன்ற அமைப்பு:**

அறிக்கையாண்டில் நகர மன்றம் தனி அலுவலர் / ஆணையர் அவர்களால் செயல்படுத்தப்பட்டது. இந்நகர் மன்ற கூட்டங்களை தனி அலுவலர்/ஆணையர் தலைமையில் மொத்தம் முறைகள் கூட்டப்பட்டு கூட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் நடைபெற்றுள்ள கூட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பொருட்களின் விபரம் வருமாறு:

| சாதாரண கூட்டம் | அவசர கூட்டம் | சிறப்பு கூட்டம் | மொத்த கூட்டம் | முடிவு செய்யப்பட்ட பொருட்கள் | ஒத்தி வைக்கப்பட்ட பொருட்கள் |
|---|---|---|---|---|---|
| 11 | 5 | 0 | 16 | 173 | 0 |

**ஒப்பந்தக்குழு:**

அறிக்கையாண்டில் ஒப்பந்தக்குழு கூட்டம் கூட்டப்படவில்லை.

**வரி மேல் முறையீட்டுக் குழு:**

அறிக்கையாண்டில் வரி மேல் முறையீட்டுக் குழு கூட்டம் கூட்டப்படவில்லை.

**3 சாலை வசதிகள்:**

அறிக்கையாண்டில் இந்நகராட்சிக்கு சொந்தமாக 42.040 கி.மீ சாலைகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வரப்பட்டது. சாலைகளின் வகைப்பாடு வருமாறு:

| சாலையின் தன்மை | 31.3.2018 முடிய கி. மீட்டரில் | 31.3.2019 முடிய கி. மீட்டரில் |
|---|---|---|
| 1. தார்சாலை | 35320 | 35320 |
| 2. கருங்கல் சாலை | - | - |
| 3. சிவப்பு கப்பி சாலை | - | - |
| 4. மண் சாலை | - | - |
| 5. சிமெண்ட் சாலை | 6720 | 6720 |
| **மொத்தம்** | **42.040** | **42.040** |

மேற்குறிப்பிட்ட நகராட்சி சாலைகள் தவிர இந்நகர் எல்லைக்குள் மொத்தம் 8.5. கி.மீ அளவிற்கு நெடுஞ்சாலைத் துறையினருக்கு சொந்தமான சாலைகளும், வசதிகளும் அமைந்துள்ளது.

**திட்ட பணிகள் விபரம்**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணிகள் எண்ணிக்கை | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|
| அ | **1.4.2018 முதல் 31.3.2019 வரை முடிவுற்ற பணிகள்** | | |
| ஆ | **1.4.2018 முதல் 31.3.2019 வரை தற்போது நடைபெற்று வரும் பணிகள்** | | |
| 1 | MP Scheme | 3 | 16.10 |
| 2 | TURIP Scheme | 24 | 203.00 |
| 3 | Internal Plumping Scheme | 1 | 133.00 |
| 4 | Solid Waste Management Scheme | 1 | 32.80 |
| 5 | IUDM Scheme 2 Package | 14 | 321.00 |

**புதிய அலுவலக கட்டிடம்**

இந்நகராட்சியில் புதிய அலுவலக கட்டிடம் உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் இயக்குதல் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி 2015-16, மற்றும் 2016-17 திட்டத்தின் கீழ் ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு அறிக்கையாண்டில் திறக்கப்பட்டது.

**சொர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டம்:**

நடப்பாண்டில சொர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டத்தில் எவ்வித பணிகளும் நடைபெறவில்லை.

**ஆ) தெருவிளக்குகள்:**

இந்நகராட்சியில் அமையப் பெற்றுள்ள தெருவிளக்குகளின் விபரம் வருமாறு:

| **விளக்கின் வகையும் எண்ணிக்கையும்** | **31.3.2018 ல் மொத்தம்** | **31.3.2019 ல் மொத்தம்** |
|---|---|---|
| 1. LED | 1359 | 1359 |
| 2. சோடியம் விளக்குகள் | 84 | 84 |
| 3 .உயர்மின் கோபுர விளக்கு | 4 | 4 |
| **மொத்தம்** | **1447** | **1447** |

தெருவிளக்குகளை எரியவிடவும், பராமரிப்பு செய்யும் போதிய மின் பணியாளர்கள் யாரும் இந்நகராட்சியில் இல்லாத காரணத்தால் தெருவிளக்கு பராமரிப்பு மேலும் தனியார் மயமாக்கப்பட்டு சபரி எலக்ட்ரிக்கல்ஸ், லெட்சுமாங்குடி என்கிற தனியார் நிறுவனம் மூலம் தெருவிளக்குகள் யாவும் பரமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் தெருவிளக்கு பராமரிப்பு செலவு ரூ. 6.25 இலட்சம் மற்றும் மின்கட்டணம் ரூ. 29.26 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**இ. குடிநீர் விநியோகம்**

இந்நகராட்சியின் தற்போதைய உபயோகத்தில் இருந்து வரும் குடிநீர் திட்டம் ஏற்கனவே பேருராட்சி காலத்தில் தமிழக அரசினால் ரூ. 18.50 லட்சம் செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டது. நகராட்சி அலுவலக வளாகத்திலே 5 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் தொட்டி அமைக்கப்பட்டு நகருக்கு குடிநீர் விநியோகம் காலை / மாலை இரு நேரங்களிலும் வழங்கப்பட்டு வரப்படுகிறது. இந்த மேல் நிலை தெட்டி மூலம் ஒருவருக்கு தனிசரி 103 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வரப்படுகிறது.

இந்திய சுதந்திர தின பொன்விழா வருடத்தின் சிறப்பு திட்ட அடிப்படையில் "**பொன்விழா ஆண்டு குடிநீர் விநியோக**" அபிவிருத்தி திட்டம் ரூ. 117/- லட்சம் மதிப்பீட்டில் 70% சத கடன் மற்றும் 30% சத மான்ய அடிப்படையில் நகர் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் / அரசாணை எண் 112 நாள்: 3.11.1999ன் படி அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 8 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர் தேக்க தொட்டியும் 40.04கி.மீ நீளத்திற்கு குடிநீர் விநியோக குழாய்கள் பதிப்பிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டபணிகள் முடிவுற்று அறிக்கையாண்டில் நகராட்சிக்கு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்புதிய குடிநீர் விநியோக அபிவிருத்தி திட்டம் பயனுக்கு வந்தவுடன் கூடுதலாக 3000 வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கிட வகை செய்யப்பட்டுள்ளது. இதற்கான குடீநிர் விநியோக உப விதிகள் ஏற்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த மேல் நிலை நீர்த் தொட்டி மூலம் ஒருவருக்கு ஒரு நாளுக்கு 103 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. ஆக, இரண்டு மேல்நிலை நீர் தொட்டி மூலம் ஒருவருக்கு ஒரு நாளுக்கு 103 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

பொதுமக்களுக்கு அறிக்கையாண்டில் ஆரம்பத்தில் வீட்டிணைப்பாக 2013 இணைப்புகளும் வணிக இணைப்புகளாக 22 ஆக மொத்தம் 2035 இணைப்புகள் உள்ளது. குடிநீர் கட்டண வரவாக அறிக்கையாண்டில் மொத்தம் ரூ. 54.73 இலட்சம் வசூலாகி உள்ளது. கடந்த ஆண்டில் ரூ. 63.44 இலட்சம்ஆகும். குடீநீர் வரி பங்கீடாக சொத்து வரியில் ரூ 42.64 இலட்சம் வரவாகியுள்ளது.

இதர வகை குடிநீர் ஆதார அமைப்புகள் ஆக பொது மக்களின் குடிநீர் தேவைகளுக்கு 7 கைபம்புகள், 144 பொது குடிநீர் குழாய்கள் மற்றும் 137 இந்தியா மார்க் II பம்புகளும் அமைக்கப்பட்டுள்ளது. இனங்களின் சேவைப்படி வறட்சியான காலங்களிலும் பொது மக்களுக்கு தட்டுப்பாடின்றி குடிநீர் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. தற்போது 3900 புதிய குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கு ரூ.133.00 இலட்சத்திற்கு TUFIDCO மூலம் கடன் பெற்று புதிய

இணைப்பகுள் ஒப்பந்ததாரர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோக பணிகளை ஒப்பந்தப் பணியாளர்களை கொண்டு செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேலும் குடிநீர் திட்ட பணியாளர்களுக்கான ஊதியமாக ரூ. 6.60 இலட்சம் மின் கட்டண செலவுகள் மற்றும் உபரி பொருட்களுக்கான செலவுகளாக அறிக்கையாண்டில் ரூ.30.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 44.60 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**உ) பாதாள சாக்கடை திட்டம்:**

இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் ஏதும் அறிக்கையாண்டில் செயல்படுத்தப்படவில்லை. பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவது குறித்த முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**4. கல்வி**

இந்நகராட்சியில் பள்ளிகள் எதுவும் பராமரிக்கப்படவில்லை. மேலும் கல்வி வரியும் வசூலிக்கப்படுவதில்லை.

**5அ) பொது சுகாதாரம்**

இந்நகரின் பொது சுகாதார பணிகளை மேற்கொள்ள ஒரு துப்புரவு ஆய்வாளர், இரண்டு துப்புரவு மேற்பார்வையாளர்கள் 26 நிரந்தர துப்புரவு பணியாளர்களும், கொசு மருந்து தெளிப்பவர் 1 பேரும் பணி செய்து வருகின்றனர். பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும், அன்றாட குப்பை கழிவுகள் மற்றும் கழிவு நீர் வடிகால் சுத்தம் செய்யும் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளபப்ட்டு வரப்படுகிறது.

பொது சுகாதார பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. சுகாதாரப் பிரிவிற்கு குப்பைகள் அகற்றிட டிப்பர் லாரி, டம்பர் பின் வாகனம், டாடா ஏசி ஒன்றும் பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. பொது சுகாதார பிரிவின் பராமரிப்பு செலவாக ரூ.65,00,000 /- அறிக்கையாண்டில் செலவிடப்பட்டுள்ளது. இதே இனத்தின் கடந்த ஆண்டு செலவு ரூ.45,00,000 /- ஆக இருந்தது. பொது சுகாதார பணியாளர்களுக்கு தலா 2 செட் சீருடைகள் ரூ.5,000/- செலவில் வழங்கப்பட்டது. பொது சுகாதார விதிகளின் கீழ் அச்சம் மற்றும் அருவருக்கதக்க உரிமம் வழங்கும் நடவடிக்கைகளின்படி அறிக்கையாண்டில் மொத்தம் ரூ.24,000/- வசூலிக்கப்பட்டது. கடந்த ஆண்டு இந்த இனங்களில் மொத்தம் ரூ.2,000/- தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

**ஆ மருத்துவ வசதிகள் மற்றும் மகப்பேறு மருத்துவம்**

இநந்கராட்சியால் மருத்துவமனைகளோ, மகப்பேறு மையங்களோ பராமரிக்கப்படவில்லை. நகரில் வாழும் பொது மக்களின் அத்தியாவசிய மருத்துவ மற்றும் மகப்பேறு சேவைகளுக்கேன ஒரு அரசு மருத்துவமனையும், ஒரு நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையமும், ஒரு தனியார் மருத்துவ மனைகளும் செயல்பட்டு வருகின்றன.

**இ) கொள்ளை நோய்கள் / தொற்று நோய் தடுப்பு**

அறிக்கையாண்டில் இந்நகராட்சி பகுதியில் எந்த ஒரு கொள்ளை நோயோ தொற்று நோய் தாக்கம் ஏதும் நிகழவில்லை.

**ஈ) யானைக்கால் நோய் தடுப்பு:**

இந்நகராட்சியால் யானைக்கால் நோய் தடுப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இத்திட்டம் ஒரு மருந்து தெளிப்பவரை கொண்டு அறிக்கையாண்டில் செயல்படுத்தப்பட்டது.

**உ) மலேரியா தடுப்பு:**

அறிக்கையாண்டில் மலேரியா நோய் தாக்கம் ஏதும் ஏற்படவில்லை

**ஊ) வெறிநாய்கள் மற்றும் பன்றிகள் தடுப்பு:**

நடப்பு ஆண்டில் நாய்கள் மற்றும் பன்றிகள் பிடித்து அப்புறப்படுத்தப்பட்டுவிட்டது

**எ) பிறப்பு இறப்புகள்:**

இந்நகராட்சியால் மகப்பேறு மையங்கள் ஏதும் பராமரிக்கப்படவில்லை. அரசு மருத்துவமனை மற்றும் தனியார் மருத்து மனைகளின் நிகழ்வுகளினால் அறிக்கையாண்டில் மொத்தம் 105 பிறப்புகள் பதிவானது. இதில் ஆண்கள் 64ம், பெண்கள் 41ம் ஆகும். கடந்த ஆண்டு பதிவான 133 பிறப்புகளில் ஆண்கள் 77ம், பெண்கள் 56ம் ஆகும். பிறப்பு விகிதம் மொத்த மக்கட் தொகைக்கு 0.41% சதவீதமாகும். இச்சதவீதம் கடந்த ஆண்டு 0.52 % ஆகும். இந்நகராட்சியினால் குடும்ப நல திட்ட மையங்கள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

இந்நகராட்சியின் அறிக்கையாண்டில் மொத்தம் பதிவான இறப்புகளின் எண்ணிக்கை 169ஆகும். கடந்த ஆண்டில் பதிவான இறப்புகளின் எண்ணிக்கை 162 ஆகும். அறிக்கையாண்டில் பதிவான இறப்புகளில் 107ஆண்களும், 62 எண்ணிக்கை பெண்களும் அடங்குவர். இறப்பு விகிதம் அறிக்கையாண்டில் 0.66% ஆகும். கடந்த ஆண்டின் இறப்பு விகிதம் 0.63% ஆக இருந்தது. அறிக்கையாண்டில் இறந்து பிறந்த குழந்தைகள் எண்ணிக்கை 0 ஆக உள்ளது. அறிக்கையாண்டில் பதிவான இறப்புகளின் எண்ணிக்கையும் இறப்பிற்கான நோய் தாக்கத்தின் விபரமும் கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு உள்ளது:

| இறப்பின் காரணம் | இறப்பின் எண்ணிக்கை |
|---|---|
| 1. காசநோய் | 3 |
| 2. எலும்புருக்கி நோய் | 0 |
| 3. இருதய நோய் | 151 |
| 4. நாய்க்கடி | 0 |
| 5. புற்றுநோய் | 5 |
| 6. மற்ற வியாதிகள் | 10 |
| மொத்தம் | 169 |

**ஏ) இடுகாடும் சுடுகாடும்**

இந்நகராட்சியால் கீழ்வரும் பகுதிகளில் சுடுகாடும், இடுகாடும் பராமரிக்கப்பட்டு வரப்படுகின்றது. 1. கொரடாச்சேரி ரோடு, 2. மேல்கொண்டாழி விநாயகர் கோவில் தெரு,

1. வெண்ணாற்றங்கரை ஆஸ்பத்திரி ரோடு, 4. அதங்குடி வெண்ணாற்றங்கரையிலும் இவைகள் அமைக்கப்பட்டுள்ளது.

**6) அரசு சேவை திட்டங்கள்:**

**அ) சத்துணவு திட்டம்:**

இந்நகராட்சியில் மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவு திட்டம் செயல்படுத்தப்படவில்லை. இத்திட்டம் மாவட்ட சமூக நலத்துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**ஆ) குடும்ப நல திட்டம்:**

இந்நகராட்சியால் குடும்ப நல திட்டம் ஏதும் செயல்படுத்தப்படவில்லை. குடும்ப நல திட்ட பணிகள் நகரில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையின் மூலம் சிறப்பு முகாம்களின் படியும் செயல்படுத்தப்பட்டு வரப்படுகின்றது.

**இ) ஈமக்கிரியைக்கான மான்ய திட்டம்:**

ஆண்டு வருமானம் ரூ. 24,000/-க்கும் குறைவாக கொண்ட தாழ்த்தப்பட்ட சமூக மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினை சார்ந்த குடும்பத்தின் இறந்தோருக்கான ஈம சடங்குக்கான மான்யத் தொகை ரூ. 2500/- தமிழக அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நலத்துறையில் அரசாணை எண் 140 நாள்: 6.8.1997ன் படி வழங்கப்பட்டு வருகின்றது.

அறிக்கையாண்டில் மொத்தம் 0 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ. 0 மான்யத் தொகையாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு 0பயணாளிகளுக்கு ரூ. 0 மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

**ஈ) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண திட்டம்:**

இத்திட்டம் மாவட்ட சமூக நலத்துறையினால் செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது. அறிக்கையாண்டில் இத்திட்டத்தின் கீழ் நகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

**உ) போலியோ நோய் தடுப்பு:**

இந்நகராட்சியில் தீவிர போலியோ நோய் தடுப்பு முகாம் நடத்தி சொட்டு மருந்துகள் வழங்கும் முகாாம் 20.01.2015 தேதியில் நடத்தப்பட்டது. இத்திட்டத்திற்கான இலக்கு இலக்கில் எட்டப்பட்டது. செயல்பாட்டின் சதவீதம் 100% மற்றும் 10.03.2019 தேதிகளில் நடத்தப்பட்டது. இலக்கு 2816 இலக்கில் 2816 எண்ணிக்கை எட்டப்பட்டது. செயல்பாட்டின் சதவீதம் 100% ஆகும்.

உ (1) அறிக்கையாண்டில் இந்நகராட்சி பகுதியில் மறு கணக்கெடுப்பு மூலம் கண்டறியப்பட்ட 408 எண்ணிக்கை கொண்ட தனி மனித கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கழிப்பறை கட்டி முடித்திட ரூ. 48,96,000-/ செலவிடப்பட்டுள்ளது.

**ஊ) சிறுசேமிப்பு திட்டம்:**

அறிக்கையாண்டில் சிறுசேமிப்பு திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 10 லட்சங்களாகும். இதில் லட்சம் சாதனையாக எட்டப்பட்டுள்ளது.

**எ) பசுமை வளையம்:**

மான்யம் ஏதும் பெறப்படவில்லை. பணிகள் ஏதும் செய்யப்படவில்லை.

**ஏ) சந்தைகளும் / திருவிழாக்களும்:**

இந்நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் வாரச்சந்தை (சனிக்கிழமை) நடத்தப்பட்டு வருகிறது. சந்தையில் வணிகர்களால் அமைக்கப்படும் கடைகளுக்கு கடை ஒன்றுக்கு ரூ.200/-வீதம் வசூல் செய்யப்படுகிறது. இந்நகராட்சியில் அறிவிக்கப்பட்ட தல திருவிழாக்களும் ஏதுமில்லை.

**ஐ) கலவை உரக்கிடங்கு:**

நகராட்சி எல்லைக்குள் சேகரமாகும் குப்பைகள் மற்றும் கழிவு பொருட்கள் அனைத்தும் புளியங்குடி வடக்கு தெருவின் பின்புறம் உள்ள ஒரு ஏக்கர் பரப்புள்ள புறம்போக்கு நிலத்தில் பேருராட்சி காலத்திலிருந்தே கலவை உரம் கிடங்காக பயன்படுத்தப்பட்டது. இக்காலியிடத்தை சுற்றியும் அருகாமையிலும் அநேக குடியிருப்புகள் தோன்றியுள்ளபடியாலும், மேலும் இக்கிடங்கு நிரம்பிவிட்டபடியாலும், தற்போது சேகரமாகும் குப்பைகளும் கழிவு பொருட்களும் நாகங்குடி காடு வெட்டி பகுதியில் சேகரிக்கப்பட்டு வரப்படுகிறது. முந்திய உரக்கிடங்கின் சேகரம் யாவும் பல ஆண்டுகளாக தேக்கமாகி, மக்கி, நீர்த்து போனபடியால் கலவை உர விற்பனை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நகராட்சிக்கு 2004-2005 அறிக்கை ஆண்டில், உரக்கிடங்கு அமைக்க ரூ.3,63,125 செலவில் 3.56 ஏக்கர் நிலம், நகராட்சி எல்லைக்குட்பட்ட பண்டுதகுடி என்ற வருவாய் கிராமத்தில், நிலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் விலை நிர்ணயம் செய்யப்பட்ட விலைக்கு கிரையம் செய்யப்பட்டுள்ளது. அரசின் மான்யம் & நகராட்சி பொது நிதியிலிருந்து கிரையம் செய்யப்பட்டதாகும். பின்னர் உரக்கிடங்கிற்கு அணுகு சாலைக்காக குனுக்கடி பகுதி புல எண்.9/9ல் 159 சென்ட் நிலம் வாங்கப்பட்டு இரண்டாவது மாநில நிதி குழு திட்டம் 2003-2004ம் ஆண்டின் கீழ் அணுகு சாலை மற்றும் காவலர் அறை ஆகிய நான்கு பணிகள் ரூ.13.30 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டு தற்போது புதிதாக வாங்கப்பட்ட உரக்கிடங்கில் இந்நகர் பகுதியில் தினசரி சேரமாகும் திடக்கழிவுகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என தரம் பிரிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் சென்னை அவர்களின் தடையின்மை சான்றும் 28.5.2004 பெறப்பட்டு கிரையம் செய்யப்பட்டதாகும். உரக்கலவை தயார் செய்யப்பட்டு வருகிறது.

**ஒ) பூங்காக்களும் / நூலகங்களும்:**

இந்நகராட்சியால் நூலகமோ, வாசக சாலையோ, மற்றும் பொழுது போக்கிற்கான பூங்காக்களோ பராமரிக்கப்படவில்லை.

**7.வருவாய் அமைப்பு:**

**அ) அங்காடிகளும் கடைகளும்:**

இந்நகராட்சிக்கென நிரந்தர வணிக அங்காடிகள் ஏதுமில்லை. நகராட்சியால் தினசரி அங்காடிகள் இரண்டு பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. இவைகளில் ஒன்று இறைச்சி வியாபாரத்திற்காகவும், இன்னொன்று இறைச்சி மற்றும் மீன் விற்பனைக்காவும் பயன்படுகிறது. இத்தலைப்பின் கீழ் நடப்பு 2018-2019 ஆண்டில் ரு. 1,58,000/- வருவாய் கிடைத்துள்ளது. கடந்த ஆண்டில் ரு. 1,42,809/- கிடைத்துள்ளது.

**ஆ) கடைகள்:**

நகராட்சிக்கு சொந்தமாக ரம்ஜான் மார்க்கெட்டில் 5 கடைகளும், நேரு வேலை வாய்ப்பு திட்டத்தில் 3 கடைகளும் ஆக 8 கடைகள் உள்ளது.

**இ) ஆடு அடிக்கும் தொட்டி:**

இந்நகராட்சிக்கு ஆடு அடிக்கும் தொட்டி ஒன்றும் மாடு அடிக்கும் தொட்டி ஒன்றும் தனித்தனியாக இயங்கி வரகிறது. இத்தலைப்பின் கீழ் அறிக்கையாண்டில் மொத்தம் ரு.1,05,000/- வரவாகி உள்ளது. கடந்த ஆண்டு ரு. 99,556/- வருவாய் ஈட்டப்பட்டது.

**ஈ. சாலை ஓர பலன் தரும் மரங்கள்:**

நகராட்சி பகுதியில் உள்ள சாலை ஓர பலனகள் தரும் மரங்களின் பலன்கள் மழை நீர் வறட்சியின் காரணமாக காய்ப்பு இல்லாததால் யாரும் ஏலம் கோர முன் வரவில்லை. மர இனங்களில் தென்னை மரங்களின் காய்ப்பு தன்மை நோய் தாக்குதலினாலும், இதர மரங்களின் வயது முதிர்ந்த தன்மையினாலும் ஏலம் கோரிட ஒருவரும் முன் வராத நிலையினால் இத்தலைப்பின்கீழ் நடப்பு குளம் மற்றும் மரப்பாசி கூடுதல் 2018-2019 மரப்பாசி ரூ.10,250 /- குளம் ரூ.25,050/- ஆகும்.

**உ) பேருந்து நிலையம்:**

பேருந்து நிலையத்திலுள்ள 11 கடைகள் உள்ளது. 2012-13 நகர்ப்புற வளர்ச்சி திட்டநிதி உதவியின் கீழ் முழுக்கடன் திட்டத்தில் ரூ.30 லட்சம் மதிப்பீட்டு செலவில், தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிறுவனத்தாரின் ந.க.29685/89/யுபி/ நாள்: 22.2.1991 படி கடன் அனுமதிக்கப்பட்டு, பேருந்து நிலைய கட்டுமான பணிகள் பொதுப்பணித்துறையினரின் வாயிலாக கட்டி 31.8.95 முடிக்கப்பட்டுள்ளது. ஆனால் பேருந்து நிலையத்திற்கு தேவையான கட்டண கழிவறை, குளியலறை, சுற்று சுவர்கள் மற்றும் உட்புற சாலை வசதிகள் அமைக்கப்படவில்லை. இப்பேருந்து நிலையம் முற்றிலும் இயங்காத நிலையில் இருந்து வருகிறது. இப்பேருந்து நிலையத்தில் 11 கடைகள் கட்டப்பட்டு 1996 ல் ஏலம் விடப்பட்டது. ஆனால் தொடர்ந்து பேருந்து நிலையம் பல ஆண்டுகளாக தொடர்ந்து சுமார் 15 முறைகள் கடைகள் ஏலம் விட்டும் ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. எனவே இயங்காத நிலையில் இருந்து வருவதால் பேருந்து நிலைய கடைகளில் இருந்து வருவாய் வரவுகள் இல்லை. கூத்தாநல்லூர் வந்து போகும் பேருந்துகளுக்கு நடப்பாண்டில் வருவாய் வரவு ஏதும் வரப்பெறவில்லை.

**வாரச்சந்தை**

புதிய பேருந்து நிலையம் அருகில் நகராட்சியால் நடத்தப்படும் வாரச்சந்தை மூலம் 2086-19ம் நிதியாண்டிற்கு ரூ. 1,97,000/- வசூல் செய்யப்பட்டுள்ளது.

**ஊ) நகரமைப்பும் நகரளவும்:**

கூத்தாநல்லூர் நகராட்சி அரசு ஆணை எண்:176 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை நாள்:19.4.94ன் படி உள்ளூர்திட்ட குழுமமாக அறிவிக்கப்பட்ட பகுதியாகும். அதன்படி இந்நகராட்சிக்கு வரைவு முழுமை திட்டம் தயாரிக்க அரசு ஆணை எண்:120 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்: 21.5.2004ன் வெளியிடப்பட்டு அதன் படி வரைவு முழுமை திட்டம் அரசு ஆணை எண் 242 நாள் 18.9.2006ல் வெளியிடப்பட்டு முழுமைதிட்டம் அங்கீகரிக்கப்பட்டு தமிழக அரசு இதழ் பிரிவில் Part II Section II நாள் 3.11.2010 பக்கம் 793-ல் வெளியிடப்பட்டு உள்ளது. மறுபிரசுரம் மாவட்ட அரசு இதழில் வெளியிடப்பட வேண்டி உள்ளது.

கூத்தாநல்லூர் நகராட்சி தனித்த உள்ளூர் திட்ட குழுமமாக அறிவிக்கப்பட்டு கடந்த 2012-2013ம் ஆண்டு வரை திட்ட அனுமதி வழங்கப்படாமல் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு வந்துள்ளது. மேலும் அபிவிருத்தி கட்டணம் வசூலிக்கப்படாமல் இருந்துள்ளது. உள்ளூர்திட்ட குழுமம் உறுப்பினர்கள் நியமிக்கப்படாமல் இருந்து வந்துள்ளது. இக்குறைபாடு களையப்பட்டு அபிவிருத்தி கட்டணம் வசூலிக்கவும் திட்ட அனுமதி வழங்கிடவும், உள்ளூர் திட்ட குழும உறுப்பினர்கள் நியமிக்கவும் நடைமுறைப்படுத்தப்படும் நகரமைப்பு பிரிவு பணிகளை மேற்கொள்ள நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அலுவலக 14.8.96 தேதியிட்ட செயல்முறை ந.க.எண் 70249 (டிபி) ன் படி ஒரு நகரமைப்பு ஆய்வில் பணியிடமும், ஒரு சங்கிலி ஆள் பணியிடமும் அனுமதிக்கப்பட்டு இப்பணியிடங்கள் முறையே நிரப்பப்பட்டு தொடர்ந்து பணியிடத்தில் காலியிடம் ஏற்படாமல் பணிபுரிந்து வருகின்றனர். கட்டிட அனுமதி வழங்குவதற்கு இவ்வறிக்கை ஆண்டில் முறையே:

| வ. எண் | விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | கட்டிட உரிமையானை கட்டணம் | 8,20,655 |
| 2 | திருமணபந்தல் பேன்ற ஆக்கிமிப்பு கட்டணம் | 0 |
| 3 | கல், மண் சேகரிப்பு, ஆக்கிரமிப்பு | 100 |
| 4 | அபிவிருத்தி கட்டணம் | 1502037 |
| 5 | மழைநீர சேகரிப்பு வைப்புத் தொகை | 2000 |
| | **மொத்தம்** | **2324792** |

என மேற்கண்ட இனங்களுக்கு தொகை ரூ.2324792 வசூலிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் அறிக்கை ஆண்டு முதல் தான் மழைநீர் சேகரிப்பு வைப்புத் தொகை ஒவ்வொரு கட்டிட அனுமதி கோரும் விண்ணப்பத்துடனும் வசூலிக்கப்பட உள்ளது.

அறிக்கையாண்டில் மொத்த கட்டிட விண்ணப்பங்கள் 28 அனுமதி கோரி பெறப்பட்டுள்ளது. இவற்றிற்கு விண்ணப்பங்களுக்கு 28 கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இனங்களுக்கு கட்டிட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நகரளவர் மற்றும் சங்கிலியாள் பணியிடத்தில் தொடர்ந்து பணியாளர் பணியாற்றியும் நகரளவு பணிகள் பொதுமக்களுக்கு தொய்வின்றி வழங்கப்பட்டு வருகிறது.

**ஓ) வரி மற்றும் வசூல் விபரம்:**

இந்நகராட்சியில் வரி விதிக்கப்பட்ட கட்டிடங்களுக்கான சொத்து வரி, காலிமனை வரி மற்றும் தொழில் வரி கேட்பின்படி அறிக்கையாண்டிலும் கேட்பு வசூல் நிலுவை விபரம் வருமாறு:

**<u>அறிக்கை ஆண்டு விபரம்</u>**

| சொத்து வரி காலிமனை வரி மற்றும் தொழில் வரி மற்றும் வரியில்லா இனங்கள் (ரூ. லட்சத்தில்) | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2018-2019 ஆண்டு | கேட்பு | | | வசூல் | | |
| | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் |
| சொத்துவரி | 61.81 | 153.77 | 215.57 | 8.80 | 30.88 | 39.68 |
| காலிமனை வரி | 25.92 | 6.74 | 32.67 | 2.92 | 1.21 | 4.13 |
| தொழில் வரி | 12.11 | 9.69 | 21.79 | 0.48 | 6.35 | 6.83 |
| வரியில்லா இனங்கள் | 0.92 | 2.36 | 3.28 | 0.00 | 2.36 | 2.36 |
| குடிநீர் கட்டணம் | 3.73 | 10.02 | 13.76 | 1.68 | 5.85 | 7.53 |
| மொத்தம் | **111.33** | **200.50** | **311.83** | **15.29** | **50.73** | **66.02** |

| சொத்து வரி காலிமனை வரி மற்றும் தொழில் வரி மற்றும் வரியில்லா இனங்கள் (ரூ. லட்சத்தில்) | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2017-2018 ஆண்டு | நிலுவை | | | % | | |
| | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் |
| சொத்துவரி | 12.97 | 94.54 | 107.51 | 4.81 | 40.91 | 45.72 |
| காலிமனை வரி | 21.82 | 4.80 | 26.62 | 2.74 | 0.62 | 3.36 |
| தொழில் வரி | 9.75 | 9.22 | 18.97 | 0.57 | 6.70 | 7.26 |
| வரியில்லா இனங்கள் | 0.30 | 0.60 | 0.90 | 0.00 | 0.56 | 0.56 |
| குடிநீர் கட்டணம் | 0.70 | 9.50 | 10.20 | 0.17 | 6.30 | 6.47 |
| **மொத்தம்** | **45.55** | **118.66** | **164.21** | **8.29** | **55.08** | **63.37** |

சொத்துக்கள் மீதான வரிவிதிப்பு விசிதாச்சாரம் இணைப்பு 3 ல் தரப்பட்டுள்ளது.

**வரி விகிதாச்சாரம்:**

நகரில் வரி விதிக்கப்பட்டுள்ள கட்டிடங்களின் எண்ணிக்கை 7554ஆகும். விதிக்கப்பட்டுள்ள வரி தொகைகளின் அடிப்படையில் வரி விகிதாச்சாரம் ரூ. 2036/- ஆக அறிக்கையாண்டில் உள்ளது.

**வழக்குகள்:**

அறிக்கையாண்டில் ஆரம்பத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளது. அறிக்கையாண்டில் பதிவான வழக்குகளின் எண்ணிக்கை இல்லை. வழக்குகளின் விபரம் வருமாறு:

| நீதி மன்ற விபரம் | நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்டது |
|---|---|
| 1. மாவட்ட முன் சீப் நீதிமன்றத்தில் | |
| 2. மாவட்ட செசன்ஸ் நீதிமன்றத்தில் | |
| 3. சென்னை உயர்நீதி மன்றத்தில் | |
| 4. தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்தில் | |
| மொத்தம் | |

இவ்வழக்குகளை முடிவு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வழக்குகள் விசாரணை உள்ளன.

**9. தணிக்கை:**

2018-2019ம் ஆண்டு தணிக்கையறிக்கையின்படி மொத்தம் நிலுவையாக உள்ள தணிக்கை பத்திகளின் எண்ணிக்கை 654 ஆகும். இத்தணிக்கை பத்திகளின்படி ஆட்சேபிக்கப்பட்டுள்ள தொகை மொத்தம் ரூ. 529.96/- இலட்சம் ஆகும். இதில் சிறப்பு கடிதத்தின் எண்ணிக்கை 333 சாதா கடிதங்களின் எண்ணிக்கை 321 ஆகும்.

**10. கடன்கள்:**

இந்நகராட்சி சாலைகள்/குடிநீர் விநியோகம்/ பேருந்து நிலையம் கட்டும்/ மின் விளக்கு வசதி போன்ற செலவினங்களுக்காக பெற்ற கடன்களின் மொத்தம் நிலுவை லட்சங்களாகும். 31.03.2017 தேதியில் கொடுக்கப்பட வேண்டிய திரும்ப செலுத்த வேண்டிய கடன்கள் மற்றும் பட்டியல்கள்

| வ. எண் | விபரம் | : | ரூபாய் லட்சங்களில் |
|---|---|---|---|
| 01 | TNUDP IMFRA | | 0.22 |
| 02 | கொடுக்கப்பட வேண்டிய வைப்பு தொகைகள் | : | 0.07 |
| 03. | ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்ட கடன் | : | 0.32 |
| | கூடுதல் | | 0.61 |

**11. நிதி வரவு செலவு விபரம்:**

**1.4.2018** முதல் **31.3.2019** முடிய உள்ள நிதியாண்டில் நகராட்சியின் வரவு செலவு விபரங்களின் சுருக்கம் கீழ்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

<u>2016-2017 அறிக்கையாண்டில் வரப்பெற்ற வரவுகள் விபரம்</u>

ரூ.லட்சத்தில்

| | | |
|---|---|---|
| 1 | வரி வரியில்லா வசூல் | 0.84 |
| 2 | முத்திரைகளின் விற்பனை வரி | 0.17 |
| 3 | ஈமசடங்கு மான்யம் | 0 |
| 4 | மாநில நிதிக்குழு வரவுகள் | 3.17 |
| 5 | 13 வது நிதிக்குழு | 0.69 |
| 6 | IUDM Electrical | 0 |
| 7 | சொர்ண ஜெயந்தி திட்டம் | 0 |
| 8 | MLA Fund | 0.24 |
| 9 | MP Fund | 0.32 |

செலவுகள்

| வ. எண் | விபரம் | வருவாய் (ம) மூலதன நிதி | குடிநீர் (ம) வடிகால் நிதி |
|---|---|---|---|
| | | (ரூ. லட்சத்தில்) | |
| 1. | பணியாளர் ஊதியம் மற்றும் போனஸ் | 212.06 | 0 |
| 2 | பராமரிப்பு செலவுகள் | 0.93 | 0.08 |
| 3 | பழுது நீக்க பராமரிப்பு செலவுகள் | 0.49 | 0.13 |
| 4 | நிர்வாக செலவுகள் | 0.37 | 0.07 |
| 5 | நிதி செலவுகள் | 0.21 | 0 |
| | **கூடுதல்** | **214.06** | **0.28** |

**31.3.2019** அன்று வங்கியிருப்புகளின் படி முடிவிருப்பு இருந்தது.

| வ. எண் | கணக்கு பற்றிய விபரம் | கணக்கு எண் | ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | பாரத மாநில வங்கி (ECS) | 10721769223 | 11.24 |
| 2 | பாரத மாநில வங்கி சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு | 10721769278 | |
| 3 | இந்தயின் ஓவர்சீஸ் வங்கி வருவாய் நிதி | சி.எ.173 | 2.48 |
| 4 | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி செலவு நிதி கணக்கு | சி.எ.176 | 1.18 |
| 5 | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி குடிநீர் நிதி | சி.எ.174 | 4.32 |
| 6 | இந்தியன் வங்கி வைப்பு நிதி கணக்கு | 486964256 | 18.42 |
| 7 | இந்தியன் வங்கி குடிநீர் இணைப்பு | 486936386 | 17.85 |
| 8 | இந்தியன் வங்கி நீடாமங்கலம் கருவூல நிதி | நகராட்சி பொது நிதி கணக்கு எண்.1 | 32.88 |
| 9 | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி நூலக வரி நிதி | 18258 | 1.42 |
| 10 | இந்தியன் வங்கி சிறப்பு சேமநலநிதி | 486921846 | 1.66 |
| 11 | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஓய்வூதிய பங்கு தொகை திட்டம் | 22820 | 1.34 |
| 12 | பாரத மாநில வங்கி சிறப்பு சாலை திட்டம் | 31485620329 | 0.16 |

**13) பொது குறிப்பு:**

அறிக்கையாண்டில் ஆணையர் மற்றும் தனி அலுவலரால் நடத்தப்பட்ட மன்ற கூட்டத்தில் போதிய நிதி ஆதாரம் இல்லாத நிலையிலும , இந்நகராட்சியால் திட்டப்பணிகள் அடிப்படை சுகாதார பணிகள், குடிநீர் மற்றும் நிர்வாக பணிகள் ஆகியவைகள் திருப்திகரமான வகையில் செய்து முடித்துள்ளது. நிர்வாகம் இயல்பாக நடத்திட ஒத்துழைப்பு தந்த அலுவலக பணியாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஆணையர்,
கூத்தாநல்லூர் நகராட்சி.

***கூத்தாநல்லூர் நகராட்சி***
***இணைப்பு 3***

**சொத்து வரி விதிப்பு விகிதம்**

கூத்தாநல்லூர் நகர் மன்ற 18.5.1994 ஆம் தேதிய 24ம் எண் தீர்மானத்தில் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகரட்சிகளின் சட்டப்பிரிவு 81ன்படி முதன்முறையாக கீழ்க்கண்ட விபரப்படி அரையாண்டு வரிகள் தீர்மானிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. பொது காரியங்களுக்கு | : | 4½ % |
| 2. குடிநீர் விநியோக மற்றும் கழிவுகள் அகற்றல் | : | 3% |
| 3. மின் விளக்கு வரி | : | 3% |
| 4. கழிப்பிட வரி | : | 2% |

## கூத்தாநல்லூர் நகராட்சி

## 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு

## 2011 வார்டு வாரியான (24 வார்டுகள்) மக்கள் தொகை கணக்கெடுப்பு

| வார்டு எண் | ஆண் | பெண் | Total | SC | ST |
|---|---|---|---|---|---|
| வார்டு 1 | 542 | 553 | 1095 | 923 | - |
| வார்டு 2 | 386 | 414 | 800 | -- | 4 |
| வார்டு 3 | 624 | 632 | 1256 | 308 | -- |
| வார்டு 4 | 1088 | 1156 | 2244 | 78 | -- |
| வார்டு 5 | 520 | 474 | 994 | 705 | -- |
| வார்டு 6 | 472 | 518 | 990 | 620 | -- |
| வார்டு 7 | 602 | 658 | 1260 | 12 | -- |
| வார்டு 8 | 416 | 465 | 881 | 7 | 73 |
| வார்டு 9 | 402 | 397 | 799 | 219 | -- |
| வார்டு 10 | 459 | 573 | 1032 | 16 | -- |
| வார்டு 11 | 474 | 501 | 975 | 37 | --- |
| வார்டு 12 | 478 | 478 | 956 | 811 | -- |
| வார்டு 13 | 446 | 502 | 948 | 10 | - |
| வார்டு 14 | 491 | 517 | 1008 | 536 | -- |
| வார்டு 15 | 445 | 473 | 918 | -- | -- |
| வார்டு 16 | 413 | 431 | 844 | -- | -- |
| வார்டு 17 | 443 | 583 | 1026 | -- | -- |
| வார்டு 18 | 538 | 641 | 1179 | 2 | -- |
| வார்டு 19 | 525 | 643 | 1168 | --- | -- |
| வார்டு 20 | 347 | 359 | 706 | 2 | -- |
| வார்டு 21 | 550 | 664 | 1214 | 4 | --- |
| வார்டு 22 | 497 | 579 | 1076 | 102 | -- |
| வார்டு 23 | 579 | 541 | 1120 | 473 | -- |
| வார்டு 24 | 481 | 510 | 991 | 305 | -- |
| திருநங்கையர் | | | 1 | | |
| கூடுதல் | 12218 | 13262 | 25481 | 5170 | 77 |

# திருவாரூர் மாவட்டம்

# கூத்தாநல்லூர் நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2018–2019 ஆம் ஆண்டு